# *9*

# மன்னிக்காத மன்னிக்கப்பட்ட வேலைக்காரன்

## (மத்தேயு 18:21-35)

*மறுஉருவாக்கப்பட்ட வாழ்வு மன்னிப்பின்*
*வாழ்வாக இருக்கிறது ...*

*மத்தேயு 18ம் அதிகாரம் மன்னிப்பைப் பற்றியதாக உள்ளது. ஒரு ஆட்டைத் தொலைத்துவிட்டு அதைத் தேடச் சென்ற ஒரு மேய்ப்பனைப்பற்றி இயேசு கூறினார். அதைக் கண்டுபிடித்ததில் அவன், "சிதறிப்போகாத தொண்ணூற்றொன்பது ஆடுகளைக்குறித்துச் சந்தோஷப்படுகிறதைப்பார்க்கிலும், அதைக்குறித்து அதிகமாய்ச்" சந்தோஷப்பட்டான். அது பாவிகளைத் தேவன் எவ்வளவாக அன்புகூருகிறார் மற்றும் அவர்களை மன்னிக்க விரும்புகிறார் என்பதைக் காண்பிக்கிறது.*

*பின்பு இயேசு, ஒரு சகோதரன் உங்களுக்கு எதிராகக் குற்றம் செய்கிறபோது நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கூறினார். ... அவனிடத்தில் போய், ... "அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து; அவன் உனக்குச் செவிகொடுத்தால், உன் சகோதரனை ஆதாயப்படுத்திக்கொண்டாய்." அவன் செவிகொடாமற் போனால், ... இரண்டொருவரை உன்னுடனே கூட்டிக்கொண்டு போ ... அவர்களுக்கும் அவன் செவிகொடாமற்போனால், அதைச் சபைக்குத் தெரியப்படுத்து. இந்தச் செயல்முறையானது மனந்திரும்புதலையும் மன்னிக்கப்படுதலையும் கொண்டுவருதலை நோக்கங்கொண்டுள்ளது. இதில் மறைந்துள்ள கருத்து பின்வருமாறு: பாவி மனந்திரும்புவதற்கு உங்களால் முடிந்த எல்லாவற்றையும் செய்யுங்கள், மற்றும் அவர் மனந்திரும்பும்போது, அவரை மன்னியுங்கள்! (மத்தேயு 18:15-20).*

*இதை நாம் வாசிக்கையில், இதன் கடுமைத்தன்மையில் நாம் மனம் ஈர்க்கப்படுகிறோம். ஆனால் பேதுரு அவ்வாறு மனம் ஈர்க்கப்படவில்லை. அவர், மனந்திரும்பிய பாவி மன்னிக்கப்பட வேண்டும் என்ற உண்மையால் மனம் ஈர்க்கப்பட்டார். ஆனால் அந்த மன்னிப்பு எத்தனை முறை நீட்டிக்கப்பட வேண்டும் என்பது பற்றி அவர் வியப்படைந்தார்.*

> *அப்பொழுது, பேதுரு அவரிடத்தில் வந்து: ஆண்டவரே, என் சகோதரன் எனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து வந்தால், நான் எத்தனைதரம் மன்னிக்க வேண்டும்? ஏழுதரமட்டுமோ என்று கேட்டான். அதற்கு இயேசு: ஏழுதர மாத்திரம் அல்ல, ஏழெழுபதுதரமட்டும் என்று உனக்குச் சொல்லுகிறேன் (மத்தேயு 18:21, 22).*

பேதுரு, தமக்கு எதிராகப் பாவம் செய்தவர்களைத் தாம் ஏழுதரம் மன்னிக்க வேண்டுமா என்று கருத்துத் தெரிவித்ததில் அவர் யூதத்துவ மார்க்கத்தின் இரபீக்களுடைய அறிவுரைக்கும் அப்பால் சென்றார். அவர்கள், அந்த நபர் மூன்று முறைகள் மன்னிக்கப்பட வேண்டும், ஆனால் நான்கு முறைகள் மன்னிக்கப்படக் கூடாது என்று கூறினர்.[1] இயேசு, "ஏழுதரமாத்திரம் அல்ல, ஏழெழுபதுதரமட்டும்" என்று கூறினார்.

நாம் மிகச்சரியாக 490 முறைகள் - ஆனால் அதற்கு அதிகமான முறையல்ல - மன்னிப்பதற்கு ஏதுவாக, நமக்கு விரோதமாகச் செய்யப்படும் பாவங்களைக் கணக்கிடுவதற்கு ஒரு நோட்டுப் புத்தகம் வைத்துக்கொள்ள வேண்டும் என்று இயேசு அர்த்தப்படுத்தவில்லை. நீங்கள் எனக்கு எதிராகப் பாவம் செய்யும் 490 முறைகள் நான் உங்களை மன்னிக்க வேண்டும், ஆனால் 491வது முறையாக நீங்கள் பாவம் செய்யும்போது, நான் "ஆஹா! அது மிக அடிக்கடியாக உள்ளது! அந்த ஒன்றை நான் மன்னிக்க தேவையில்லை!" என்று கூறமுடியும் என்பதாக அவர் அர்த்தப்படுத்தவில்லை. மன்னிப்பு என்பது பாவத்தைப் போல அடிக்கடியானதாக இருக்க வேண்டும், மற்றவர்கள் நமக்கு எதிராக எவ்வளவு அடிக்கடி பாவம் செய்தாலும், நாம் அவர்களைத் தொடர்ந்து மன்னித்துக் கொண்டே இருக்க வேண்டும் என்று அவர் அர்த்தப்படுத்தினார்.

பின்பு, மன்னிப்பின் மீதான இந்தப் பாடத்தை மறுவலியூட்டுவதற்காக, பெரிய கடன் ஒன்று தனக்கு மன்னிக்கப்பட்ட ஒரு மனிதன் தன்னிடத்தில் சிறிய அளவில் கடன் பட்டிருந்த இன்னொருவனை மன்னிக்க மறுத்து விட்டது பற்றிய உவமை ஒன்றை இயேசு கூறினார். அந்த மனிதன் *மன்னிக்காத மன்னிக்கப்பட்ட வேலைக்காரனாக* இருந்தான். இந்த உவமையில் அவனை நாம், மன்னித்தல் தொடர்பாக வித்தியாசமான நிலைகளில் நான்கு வழிகளில் கண்ணோக்குகிறோம்.

## அவன் ஒரு மன்னிக்கப்படாத வேலைக்காரனாக இருந்தான்

23ம் வசனத்தில் நாம், "எப்படியெனில், பரலோகராஜ்யம் தன் ஊழியக்காரரிடத்தில் கணக்குப்பார்க்க வேண்டுமென்றிருந்த ஒரு ராஜாவுக்கு ஒப்பாயிருக்கிறது" என்று வாசிக்கிறோம். இந்த உவமையில் வருகிற ராஜா என்பவர் தேவனைக் குறிப்பவராக இருக்கிறார். இவ்வாறு, இந்த உவமையானது நமக்கு, *தேவன் நம்மைக் கணக்கு ஒப்புவிப்பவர்களாக்கியுள்ளார்* என்பதை நினைவூட்டுகிறது. அவர் நம்மைப் பற்றி அறிகிறார்; அவர் நமது பாவங்களைப் பற்றி அறிகிறார்; அவர் நமது பாவங்களை நமது கணக்கில் சுமத்துகிறார்; மற்றும், நாம் செய்துள்ள ஒவ்வொரு விஷயத்திற்கும், அது நன்மையாக அல்லது தீமையாக எப்படியிருந்தாலும், அதைக் கணக்கு ஒப்புவிக்கும்படி அவர் நம்மை அழைக்கும் நியாயத்தீர்ப்பின் நாளான (ரோமர் 2:6; வெளிப்படுத்தின விசேஷம் 20:12; பிரசங்கி 12:13) ஒருநாளில் அவர் "கணக்குகளைத் தீர்ப்பார்."

24ம் வசனத்தில் நாம் பின்வருவதை அறிகிறோம்: "அவன் கணக்குப்பார்க்கத்தொடங்கினபோது பதினாயிரம் தாலந்து கடன் பட்டவன் ஒருவனை அவனுக்கு முன்பாகக் கொண்டுவந்தார்கள்." அந்த மனிதன் பட்டிருந்த கடன்தொகையே நமது உள்ளத்தில் உடனடியாகப் பதிவதாக

உள்ளது: பதினாயிரம் தாலந்துகள்!

எனது வேதாகமத்தில் உள்ள அடிக்குறிப்பானது, ஒரு தாலந்து என்பது அனேகமாக 1000 டாலர்கள் [சுமார் 46000 ரூபாய்] மதிப்புடையதாக இருக்கலாம் என்று கூறுகிறது. அது ஒரு பழைய மதிப்பீடாக உள்ளது. தாலந்து என்பது "வெள்ளித்தாலந்து என்று யூகித்தால்" அதன் மதிப்பு 1600 அல்லது 1700 டாலர்கள் [73600 அல்லது 78200 ரூபாய்கள்] இருக்கும் - இது நாம் கணக்கிடுதலைக் காட்டிலும் இதன் மதிப்பு 60 அல்லது 70 சதவிகிதம் அதிகமாக இருக்கும் என்று பெரும்பான்மையான விளக்கவுரையாளர்கள் கூறுகின்றனர். மற்றும் இங்கு ஒரு பொன்தாலந்து குறிப்பிடப்பட்டது என்று எடுத்துக்கொண்டால், அது இதைவிட இருபது மடங்கு அதிகம் மதிப்பு உடையதாக இருக்கும்! அது ஒவ்வொரு தாலந்தையும் 34,000 டாலர்கள் [1564000 ரூபாய்கள்] மதிப்பு உடையதாக, அதாவது நாம் இங்கு கணக்கிடுவதைக் காட்டிலும் முப்பத்து நான்கு மடங்கு அதிகமாக்குவதாக இருக்கும். ஆனால் தாலந்தின் மதிப்பாக நாம் இங்கு பழைமையான அளவீடான 1000 டாலர் [46000 ரூபாய்] என்பதையே பயன்படுத்துவோம். அந்த விகிதத்தில், அவர் 10,000,000 டாலர் [460000000 ரூபாய்] கடன்பட்டிருந்தார். அந்த எண்ணானது கற்பனையைத் தள்ளாடச் செய்கிறது. உயிருடன் உள்ளவர்களிலேயே மிகவும் பணக்காரர் கூட 10,000,000 டாலர் [460000000 ரூபாய்] கடன் என்பது மிகவும் பெரிய கடன் தொகையாக உள்ளது என்று நினைப்பார்.

ஆனால் அது இந்த உவமையின் ஒரு பாகமாக மாத்திரமே உள்ளது. அந்த 10,000,000 டாலர் [460000000 ரூபாய்] என்பது இப்போதைய 10,000,000 டாலர் [460000000] ரூபாய் என்பதைக் காட்டிலும் மிக அதிகமானவற்றை வாங்கக் கூடியதாக இருந்திருக்கும். உண்மையில் ஒரு தினேரியம் என்பது ஒரு நாள் உழைப்பின் நியாயமான கூலியாக இருந்தது, அது திராட்சத் தோட்டத்து வேலைக்காரர்கள் பற்றிய உவமையில் வேலைக்காரர்களுக்குத் தரப்பட்ட கூலி யாக இருந்தது (மத்தேயு 20:1-16).[2] ஆனால் அது, இந்த மனிதன் தனது எஜ மானருக்கு 50,000,000 நாட்கள் கூலிக்குச் சமமான தொகை கடன்பட்டிருந்தான் என்று அர்த்தப்படுகிறது! ஒருவேளை வாரத்திற்கு சராசரிக் கூலி 250 டாலர்களாக (11500 ரூபாயாக) உள்ளதென்று எடுத்துக்கொண்டால், அதை ஐந்தால் வகுத்தால், ஒரு நாள்கூலி சராசரியாக 50டாலர்கள் (2300 ரூபாய்) என்று அர்த்தப்படுகிறது. இதை 50,000,000 நாட்களால் பெருக்கினால் நீங்கள் மொத்தம் 2,500,000,000 டாலர்கள் [115000,000,000 ரூபாய்] என்பதாகக் கணக்கிடுவீர்கள்! இந்த மனிதன் இன்றைய நாட்களில் 2,500,000,000 டாலர்களுக்கு [115000,000,000 ரூபாய்க்கு] சமமான தொகை கடன்பட்டிருந்தான்!

அதிலிருந்து நாம் கற்றுக்கொள்வது என்ன? *இந்த மனிதன் தன்னால் திருப்பிச் செலுத்துவதற்கு மிகவும் இயலாத கடன்பட்டிருந்தான்!*

அவன் இப்படிப்பட்ட சூழ்நிலைக்கு எப்படித் தள்ளப்பட்டான்? எவரொருவரும் அறிவதில்லை. யாரோ ஒருவர், இந்த உவமையில் கூறப்படுகிற வேலைக்காரன் ஒரு பிரபுவாக இருந்து தனது வரிகளை செலுத்தாமல் ஏமாற்றி யிருக்கலாம் அல்லது அரசின் நிதியிலிருந்து களவுசெய்திருக்கலாம் என்று கூறினார். ஆனால் அதுவும்கூட இப்படிப்பட்ட பேரளவிலான கடனுக்குப் பொறுப்பாக இருந்திருக்க முடியாது. ஒரு மனிதர் பின்வருமாறு எழுதினார்.

இந்தக் கடன் எவ்வளவு பேரளவானதாக இருந்தது என்பதற்கு ஒரு கருத்தைக் கொடுப்பதற்கு, பலஸ்தீனத்தின் (யூதேயா, பெரேயா, இதுமேயா, சமாரியா மற்றும் கலிலேயா என்ற) ஐந்து மாகாணங்களினுடைய மொத்த வரி வருவாய் என்பது எண்ணூறு தாலந்துகளாகவே இருந்தது. வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், இந்த வேலைக்காரனின் கடனானது மொத்த நாட்டின் நிதிநிலை அறிக்கையினுடைய தொகையைக் காட்டிலும் பத்து மடங்கிற்கும் அதிகமானதாக இருந்தது.[3]

ஒரு மனிதன் இவ்வளவு கடன்பட முடிந்தது எவ்வாறு? அவன் இவ்வளவு கடன்பட்டிருக்க முடியாது என்பதே பதிலாக எனக்குக் காணப்படுகிறது! ஒரு மனிதன் இவ்வளவு கடன்படுதல் என்பது சாத்தியமாக இருந்ததில்லை!

இயேசு இப்படிப்பட்ட ஒரு எண்ணிக்கையைப் பயன்படுத்தியது ஏன்? பரலோக ராஜ்யத்தில் மன்னிப்பு என்பது எத்தகையது என்பதைக் காண்பிக்க அவர் விரும்பினார் (மத்தேயு 18:23). தேவனுடைய மன்னிப்பின் அளவைத் தமது உரையைக் கேட்பவர்களின் மனதில் பதியவைப்பதற்காக, மக்கள் தேவனுடைய பிள்ளைகள் ஆகிறபோது, அவர்களுக்கு மன்னிக்கப்படுகிற பாவக்கடனுடைய அளவை அவர்களின் மனதில் பதிய வைக்க வேண்டியிருந்தது.

எனவே, நமது பாவத்தின் காரணமாக, நாமும் கூட, நம்பிக்கையற்ற வகையில் கடன்பட்டு இருக்கிறோம் என்பதே பாடமாக உள்ளது. பாவமானது நமக்கு நாமே அதை ஒருக்காலும் நேர்ப்படுத்திக்கொள்ள இயலாத அளவுக்கு சர்வவல்லமையுள்ளவரான தேவனை அவ்வளவு பயங்கரமாகப் பாதிப்பதாக உள்ளது. நாம் சாத்தியமான வகையில் திருப்பிச் செலுத்த இயலாத அளவு அவருக்குக் கடன்பட்டிருக்கிறோம்!

25ம் வசனத்தில் நாம் பின்வருமாறு வாசிக்கிறோம்: "கடனைத்தீர்க்க அவனுக்கு நிர்வாகம் இல்லாதபடியால், அவனுடைய ஆண்டவன் அவனையும் அவன் பெண்ஜாதி பிள்ளைகளையும், அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று, கடனைத் தீர்க்கும்படிக் கட்டளையிட்டான்." அவன் அந்தக் கடனைத் திருப்பிச் செலுத்த எவ்வளவு காலம் ஆகியிருக்கும்? ஒருவேளை அந்தக் கடன் 10,000,000 டாலர்களுக்கு (460000000 ரூபாய்க்கு) சமமானதாக இருந்தது என்று வைத்துக்கொள்வோம். 5 சதவிகிதம் வட்டி வீதம் அதற்குரிய வட்டி மாத்திரமே, ஆண்டிற்கு 500,000 டாலர்கள் (23000000 ரூபாய்) ஆக இருந்திருக்கும்! அவன் சிறைச்சாலையில் இருக்கும்போது அந்தத் தொகையைத் திருப்பிச் செலுத்த அவன் கொண்டிருக்கும் வாய்ப்பு என்னவாக இருந்திருக்கும்? அவன் தனக்கு வேலை செய்வதென்று "வெளியே" நூறு மனிதர்களைக் கொண்டிருந்தாலும்கூட, அவர்கள் அவன் தனது கடன்மீதான வட்டியைச் செலுத்துவதற்குக்கூட மிகக் கொஞ்சமான தொகையையே ஈட்டியிருப்பார்கள்! அவன் தான் பட்ட கடனைத் திருப்பிச் செலுத்தவே வகையற்றவனாக இருந்தான் என்பதே உண்மையாக உள்ளது. அவன் தனது வாழ்நாளில் எஞ்சிய காலம் முழுவதும் சிறைச்சாலையில் இருந்தான். *அவன் வாழ்நாள் முழுவதும் சிறையில் இருக்க வேண்டும் என்பதே அவனுக்குத் தண்டனையாக இருந்தது.*

விஷயம் நமக்கும் இதேபோன்றுதான் உள்ளது: நமது பாவத்திற்குத் தண்டனை நரகம் மட்டுமே என்னும் அளவுக்கு நமது பாவம் மிகவும் பயங்கர மானதாக உள்ளது. நாம் பட்டுள்ள கடனைத் தீர்க்க அங்கு நாம் போதிய அளவுக்கு

*உபத்திரவப்பட ஒருக்காலும் முடியாது. ஆகவே, அவனது தண்டனை வாழ்நாள் முழுவதுமானது, நமது தண்டனை நித்தியத்திற்குமானது என்பதைத் தவிர, மற்ற வகையில் நமது தண்டனை அவனுடைய தண்டனை போன்றதாகவே இருக்கிறது!*

இதன்விளைவாக, இந்த உவமையில் நாம், மன்னிக்கப்படாத பாவியொருவரின் முழுமையான சித்தரிப்பு ஒன்றைப் பெறுகிறோம்: அவர் பாவம் செய்திருக்கிறார், ஏனெனில் எல்லா மனுஷரும் பாவம் செய்திருக்கிறோம் (ரோமர் 3:23). அவரது பாவத்திற்கு அவரைத் தேவன் கணக்கு ஒப்புவிக்கும்படி வைக்கிறார். அவரது பாவமானது, அவர் ஒருக்காலும் திருப்பிச் செலுத்த இயலாத கடன் ஒன்றை உருவாக்குகிறது. அவர் நம்பிக்கையற்ற நிலையில் இழந்து போகப்பட்டுள்ளார். அவர் தேவனுக்கு எதிராகத் தாம் செய்துள்ள பாவங்களை ஈடுகட்டப் போதிய அளவுக்கு எதையும் செய்ய இயலாத நிலையில் இருக்கிறார். கடைசியாக, அவரைத் தேவன் அழைத்து அவரது பாவத்திற்குக் கணக்கு ஒப்புவிக்கும்படி கேட்டு, அந்தப் பாவத்திற்காக அவரைத் தண்டிக்கிறார். அந்தத் தண்டனை என்னவாக உள்ளது? "பாவத்தின் சம்பளம் மரணம்" (ரோமர் 6:23). அந்த மரணம் என்பது தேவனை விட்டு நித்தியத்திற்கும் பிரிந்து நரகத்தில் இருத்தலாகிறது! என்ன ஒரு சந்தோஷமற்ற சித்தரிப்பு! ஆனால் இந்த உவமை யானது அத்துடன் முடிவதில்லை. அந்த மனிதனை வேறொரு நிலையில் நாம் காண்கிறோம்.

## அவன் மன்னிக்கப்பட்ட வேலைக்காரனாக இருந்தான்

நாம், 26ம் வசனத்தில், "அப்பொழுது, அந்த ஊழியக்காரன் தாழ விழுந்து, வணங்கி: ஆண்டவனே! 'என்னிடத்தில் பொறுமையாயிரும், எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன் என்றான்' " என்று வாசிக்கிறோம். அவன் எல்லாவற்றையும் எப்படித் திருப்பிச் செலுத்தமுடியும் என்று நினைத்தான் என்பதைக் காணுதல் கடினமாக உள்ளது. இருப்பினும் அவன் இதை கண்டான்: அவன் தன்னை இரக்கம் நிறைந்த எஜமானரின் இரக்கத் திற்கு ஒப்புவித்தலே மன்னிப்பிற்கான ஒரே வாய்ப்பாக இருந்தது.

*நமக்கும்* அதுவே ஒரே வாய்ப்பாக உள்ளது. நாம் நமது நற்செயல்களினால் மீட்கப்பட முடியாது. *நம்மையே நாம், நமது இரக்கம் நிறைந்த தேவனு டைய இரக்கத்திற்கு ஒப்புக்கொடுத்தல் என்பதே நாம் இரட்சிக்கப்படக் கூடிய ஒரே வழியாக உள்ளது!* நீங்கள் மன்னிக்கப்படத் தயாராகிறபோது, தேவனிடத்திற்குப் பின்வரும் எண்ணப்போக்குடன் வராதீர்கள்: "தேவனே பாருங்கள், நான் மிகவும் நல்லவனாக இருக்கிறேன். நான் தேவபக்தியுள்ளவனாக இருந்திருக்கவில்லை. அவ்வளவுதான். நிறைவாக நான் என்னை உம்மிடத்தில் ஒப்புவிக்கவும் சபையின் அங்கமாக இருக்கவும் தீர்மா னம் செய்துள்ளேன். இந்த விஷயத்தில் நாம் ஒரு பேரம் பேசலாம் என்று நான் நம்புகிறேன். நீர் எனது பாவங்களை மன்னிப்பீர் என்றால் நான் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வேன். பின்பு நான் உம் பக்கம் இருப்பேன், மற்றும் என்னைக்கொண்டிருக்க நீர் அதிர்ஷ்டசாலியாக இருக்க வேண்டும் என்று எண்ணிக்கொள்வேன்." மன்னிக்கப்படுவதற்கு அது சரியான வழியாக *இருப்ப தில்லை!* மன்னிக்கப்படுவதற்கு நீங்கள், எந்தக் காலத்திலும் திருப்பிச் செலுத்துவதற்கு முடியாத மிகவும் அதிகமான அளவில் தேவனுக்குக்

கடன்பட்டுள்ளதை உணர்ந்தறிந்து, "நான் எனது கைகளில் ஒன்றும் கொண்டுவரவில்லை; உமது சிலுவையையே நான் பற்றிக்கொள்கிறேன்" என்று கூறி வரவேண்டும். ஆயக்காரன் ஜெபித்தது போல "தேவனே, பாவியாகிய என்மேல் இரக்கமாயிரும்" என்று கெஞ்ச வேண்டும். நீங்கள் ஊதாரி மகனைப்போல்: "பரத்துக்கு விரோதமாகவும் ... நான் பாவஞ்செய்தேன் ... நான் பாத்திரனல்ல" என்று அறிக்கையிட்டு வரவேண்டும்.

நீங்கள், வேதாகமத்தில் தேவன் கொடுத்துள்ள வழியிலேயே கிறிஸ்துவினிடத்தில் வரவேண்டும்: இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் கொள்ளுதல் (யோவான் 8:24), உங்கள் விசுவாசத்தை அறிக்கையிடுதல் (மத்தேயு 10:32), உங்கள் பாவங்களில் இருந்து மனந்திரும்புதல் (லூக்கா 13:3), மற்றும் இரட்சிக்கப்படுவதற்கு ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுதல் (மாற்கு 16:16). ஆனால் நீங்கள் இவற்றைச் செய்யும்போது, நீங்கள் தேவனுடன் பேரம் பேசுவது போன்று இவற்றை நீங்கள் செய்யக்*கூடாது*: உமது பகுதியில் இவ்வளவு இரட்சிப்பு தரப்படவேண்டும் என்பதற்காக, இவ்வளவு கிரியைகள் என் பகுதியில் உள்ளன என்பதுபோல அல்ல. நீங்கள் செய்கிற எதுவும் உங்களுக்கு இரட்சிப்பை *ஈட்டாது* என்பதை உணர்ந்து அறிந்த நிலையில், தேவனுடைய இரக்கத்திற்காக நீங்கள் வேண்டுதல் செய்து தாழ்மையோடு அவரிடம் கெஞ்சிக்கேட்கும் வகையில் நீங்கள் இவற்றைச் செய்ய வேண்டும்!

27ம் வசனம், "அந்த ஊழியக்காரனுடைய ஆண்டவன் மனதிரங்கி, அவனை விடுதலைபண்ணி, கடனையும் அவனுக்கு மன்னித்துவிட்டான்" என்று கூறுகிறது. இங்கு நற்செய்தி உள்ளது! அந்த ராஜா, சாத்தியமான வகையில் வேலைக்காரன் திருப்பிச் செலுத்த இயலாத கடனை அவனுக்கு மன்னித்து விட்டார். இதை நமக்கு நடைமுறைப்படுத்தினால், அது கிருபை என்று அழைக்கப்படுகிறது. *நாம் இரட்சிக்கப்படுகிறபோது, நாம் பாத்திரராக இருப்பதற்கும் அப்பால் தேவன் நம்மை மன்னிக்கிறார்*! நாம் ஈட்டியிராத தயவு ஒன்றைத் தேவன் நம்மீது பொழிகிறார். நாம் ஒருக்காலும் திருப்பிச் செலுத்தாத மற்றும் திருப்பிச் செலுத்த இயலாத மற்றும் திருப்பிச் செலுத்த நம்பிக்கையற்ற கடன் ஒன்றைத் தேவன் இரத்து செய்கிறார்!

இந்த உவமையில், அந்த வேலைக்காரன் கடனைத் திருப்பிச் செலுத்திய *பின்பு* அவனை அந்த ராஜா மன்னிக்கவில்லை என்பதைக் கவனியுங்கள். அதுபோன்றே தேவன், அவருக்கு நாம் பட்டுள்ள கடனை அழிக்கப் போது மான அளவுக்கு நாம் கிரியை செய்தபின்பு நம்மை மன்னிப்பதில்லை. நாம் நித்திய நரகத்தில் இருந்து நமது குற்றங்களுக்கானவற்றைத் திருப்பிச் செலுத்துவதற்கு மாறாக, நமது பாவங்களுக்கான கிரயமாகக் கிறிஸ்துவின் இரத்தத்தைத் தேவன் ஏற்றுக்கொள்கிறார் (தீத்து 3:5ஐக் காணவும்).

ஆனால் இந்த வரலாறு இத்துடன் முடிவதில்லை. அந்த வேலைக்காரன் மன்னிக் கப்பட்ட பின்பு, மற்றொருவனை மன்னிக்கத் தவறிவிட்டார், என்பது துக்கத்துக்குரியதாக உள்ளது.

## அவன் மன்னிக்காத வேலைக்காரனாக இருந்தான்

28ம் வசனத்தில் நாம் பின்வருமாறு வாசிக்கிறோம்: "அப்படியிருக்க, அந்த ஊழியக்காரன் புறப்பட்டுப்போகையில், தன்னிடத்தில் நூறு வெள்ளிப்பணம் கடன் பட்டிருந்தவனாகிய தன் உடன்வேலைக்காரரில் ஒருவனைக் கண்டு,

அவனைப் பிடித்து, தொண்டையை நெரித்து: நீ பட்ட கடனை எனக்குக் கொடுத்துத்தீர்க்கவேண்டும் என்றான்.” என்ன ஒரு போக்கிரித்தனம்! அவன் மன்னிக்கப்பட்டிருந்தான். அவன் அகமகிழ்ந்திருக்க வேண்டும். அவன் ஒவ்வொருவர்மீதும் நல்லுணர்வு கொண்டிருக்க வேண்டும். அவன் தனக்குக் கடன்பட்டுள்ள எல்லாவற்றையும் தாராளமாக மன்னித்திருக்க வேண்டும்.

ஆனால் இராஜாவிடமிருந்து நேராக வந்த அவன், தனக்குச் சிலவற்றைக் கடன்பட்டிருந்த மனிதன் மீது எகிறிக்குதித்தான். அந்த மனிதன், இந்த நபரின் கழுத்தைப்பிடித்து நெறித்து அவனை உலுக்கி, “நீ பட்ட கடனை எனக்குக் கொடுத்துத் தீர்க்கவேண்டும்” என்று கூறினான்!

அவன் நூறு வெள்ளிப்பணம் கடன்பட்டிருந்தான் என்பதே உண்மையாக இருக்கிறது. அது ஒருவேளை சுமார் 20 டாலர்களுக்கு (920ரூபாய்க்கு) சமமானதாக இருந்திருக்கும். அல்லது அது ஒரு நூறு நாட்கள் வேலைக்கான கூலிப்பணமாக இருந்திருக்கும். அது இன்றைய நாட்களில் ஒருவேளை 5,000 டாலர்களுக்கு (230000 ரூபாய்க்கு) சமமாக இருக்கும். அது ஒரு கணிசமான தொகைதான், ஆனால் அது திருப்பிச் செலுத்தக் கூடிய ஒரு தொகையாக இருந்தது. இருப்பினும் இந்தத் தொகைக்கும் அந்த மனிதனுக்கு மன்னிக்கப்பட்டிருந்த தொகைக்குமான நேரெதிரான ஒப்பீடு என்பதே முக்கியமானதாக உள்ளது. 20 டாலர்கள் (920 ரூபாய்) கடனை 10,000,000 டாலர்கள் (460000000 ரூபாய்) கடனுடன் ஒப்பிட்டுப்பாருங்கள்! அவன் மன்னிக்கப்பட்டிருந்த தொகையில், ஒரு சதவிகிதத்தில் 2/10,000 மடங்குதான் இந்த நபர் அவனுக்குக் கடன்பட்டிருந்தான்!

அதிலிருந்து நாம் கற்றுக்கொள்வது என்ன? பின்வருவது மாத்திரமே: *நாம் மன்னிக்கும்படி அழைக்கப்படுவது எதுவாக இருந்தாலும், அது தேவன் நமக்கு மன்னித்துள்ளவற்றுடன் ஒப்பிடப்படத் தொடங்குவது இல்லை.* மற்றவர்கள் உங்களுக்கு எதிராக எவ்வளவு பெரிய பாவங்கள் செய்திருந்தாலும் அவற்றைவிட, தேவனுக்கெதிரான உங்கள் பாவங்கள் எல்லையற்ற வகையில் மாபெரியவைகளாக உள்ளன! ஆகவே, நீங்கள் உங்களுக்கு எதிராகப் பிறர் செய்துள்ள தவறுகளைத் தாராளமாக மன்னிக்க வேண்டாமா?

அடுத்த இரு வசனங்களில் நாம் பின்வருமாறு வாசிக்கிறோம்: “அப்பொழுது அவனுடைய உடன் வேலைக்காரன் அவன் காலிலே விழுந்து: ‘என்னிடத்தில் பொறுமையாயிரும்,’ எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன் என்று, அவனை வேண்டிக்கொண்டான். அவனோ சம்மதியாமல், போய், அவன் பட்ட கடனைக் கொடுத்துத் தீர்க்குமளவும் அவனைக் காவலில் போடுவித்தான்.” நமது உவமையில் உள்ள வேலைக்காரன் மன்னிக்கப்பட்டவனாக ஆனால் மன்னிக்காதவனாக இருந்தான். அவன் தனது ராஜாவினிடத்தில் கூட்டிச்செல்லப்பட்டான். அவன் மன்னிக்கும் அதிகாரம் கொண்டிருந்தான். ஆனால் அவன் ராஜாவின் உதாரணத்தில் இருந்து எதையும் கற்றுக்கொண்டிருக்கவில்லை. அவன் ராஜாவின் முன்னால் தரையில் விழுந்திருந்தபோது, ராஜா அவனை மன்னித்துவிட்டார். அவனது உடன் வேலைக்காரன் அவனுக்கு முன்னால் தரையில் விழுந்தபோது, அவன் மன்னிக்க மறுத்துவிட்டான்.

சில வேளைகளில் நாமும் அதுபோல் இருக்கிறோம்: *நாம் மன்னிக்கப்பட்டிருந்தாலும் மன்னிக்க மறுக்கிறோம்.* யாரோ ஒருவர் என்னை இழிவுபடுத்துகிறார். அந்த இழிவுபடுத்துதலை மன்னிப்பதற்கு மாறாக நான்

அதை நினைவில் வைத்திருந்து அடுத்து முறை அவர் என்னைக் காணும்போது அவரை நான் இழிவுபடுத்துகிறேன். அலுவலகத்தில் யாரேனும் ஒருவர் கைமறை வாகச் சிலவற்றைச் செய்து, நான் பெற்றிருக்க வேண்டிய. பதவி உயர்வைத் தான் பெற்றுக்கொள்கிறார் என்று நான் நினைக்கலாம். எனவே அவரது புதிய வேலையில் அவருக்குத் தடை உண்டாக்க என்னால் முடிந்த எல்லாவற்றையும் நான் செய்கிறேன்.

சபையில் கூட இது நடைபெறுகிறது: "நான் ஒரு வகுப்பில் போதிக்க அவர்கள் என்னை அனுமதிக்க மாட்டார்கள், மற்றும் எல்லாரும் வியாதிப்பட்டு இருக்கையில் அதை எப்போதும் அவர்கள் அறிவிக்கின்றனர், ஆனால் நான் வியாதிப்படுகிறபோது அதை அவர்கள் அறிவிப்பதில்லை. நான் யாரென்று அவர்களுக்குக் காண்பிப்பேன்; நான் அவர்களை மன்னிக்க மாட்டேன். அவர்கள் வருத்தப்படும்படி செய்வேன். என்னால் முடிந்த வழியில் எல்லாம் அவர்களைப் புண்படுத்துவேன்." *நான் மிக அதிகமாக மன்னிக்கப்பட்டு இருக்கிறோம், ஆனால் நமக்கு எதிரான "பாவங்கள்" மிகவும் சிறிதாக இருந்தாலும் நாம் அவற்றை மன்னிக்க மறுத்து விடுகிறோம்.*

31ம் வசனத்தில் நாம் பின்வருமாறு வாசிக்கிறோம்: "நடந்ததை அவனுடைய உடன் வேலைக்காரர் கண்டு, மிகவும் துக்கப்பட்டு, ஆண்டவனிடத்தில் வந்து, நடந்ததையெல்லாம் அறிவித்தார்கள்." கிறிஸ்தவர்கள் மன்னிக்கத் தவறுகிறபோது மனவேதனை அடைதல் சரியானதாகவே உள்ளது. ஆனால் ராஜா அதைக் கண்டறிந்தார் என்பதே பிரதான கருத்தாக உள்ளது. *மற்றும் நமது ராஜாவாகிய தேவன், நாம் எப்போது மன்னிக்கத் தவறுகிறோம் என்பதை அறிகிறார்!*

அது நம்மை, அந்த வேலைக்காரனின் அடுத்த நிலைக்குக் கொண்டுவருகிறது:

## அவன் மன்னிக்கப்படக் கூடாத வேலைக்காரன் ஆனான்

அவன் மன்னிக்க மறுத்திருக்கும் வரையிலும், அவன் மன்னிக்கப்படக் கூடாதிருந்தது.

32 மற்றும் 33ம் வசனங்கள், "அப்பொழுது, அவனுடைய ஆண்டவன் அவனை அழைப்பித்து, 'பொல்லாத ஊழியக்காரனே,' நீ என்னை வேண்டிக்கொண்டபடியினால் அந்தக்கடன் முழுவதையும் உனக்கு மன்னித்துவிட்டேன்; நான் உனக்கு இரங்கினதுபோல், நீயும் உன் உடன்வேலைக்காரனுக்கு இரங்கவேண்டாமோ? என்று சொல்லி," என்று கூறுகின்றன. மன்னிக்கப்பட்ட இந்த மனிதன் அதே வகையான மன்னிப்பை மற்ற வர்களுக்கும் வழங்க வேண்டும் என்பது நியாயமானதாகவே உள்ளது.

*தேவனால் இலவசமாக மன்னிக்கப்பட்டுள்ள நாம், அதே வகையான மன்னிப்பை மற்றவர்களுக்கு வழங்க வேண்டும் என்பது நியாயமனாதாகவே உள்ளது!* அவ்வாறு செய்யும்படி நமக்கு கட்டளையிடப்பட்டுள்ளது: "ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர்பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்" (கொலோசெயர் 3:13). தேவன் நம்மீது அன்புகூருவது போல நாம் மற்ற

வர்கள்மீது அன்புகூர வேண்டும் மற்றும் தேவன் நம்மை மன்னித்தது போல நாம் மற்றவர்களை மன்னிக்க வேண்டும்!

ஆனால் நாம் பின்வருமாறு மறுக்கலாம்: "அவனை மன்னிக்கப் போதுமான அளவுக்கு அவன் நல்லவனாக இருப்பதில்லை." தேவன் நம்மை மன்னித்தபோது நாம் எவ்வளவு நல்லவர்களாக இருந்தோம்? அல்லது: "அவனை மன்னிக்கக்கூடாத அளவுக்கு அவன் எனக்கு மிகவும் அதிக மோசமானவற்றை செய்திருக்கிறான்." ஆனால் நாம் தேவனுக்கு எவ்வளவு மோசமானவற்றைச் செய்திருந்தோம்? அவைகள் பத்தாயிரம் தாலந்துகள் கடனுக்குச் சமமானவைகளாக இருந்தன. இயேசு சவுக்கினால் அடிக்கப்பட்டு, துப்பப்பட்டு, ஏளனம் செய்யப்பட்டு, அடிக்கப்பட்டு, சிலுவையில் அறையப்பட்டார். இருப்பினும் அவர் அந்த வேளையிலும் மன்னிக்க மனவிருப்பமாக இருந்தார். அல்லது: "ஆனால் அவன் ஒருக்காலும் என்னிடத்தில் வந்து மன்னிப்புக்காகக் கெஞ்சவில்லையே." இயேசு, "பிதாவே, இவர்களுக்கு மன்னியும்; தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" என்று ஜெபிப்பதற்கு முன்னர், யாராவது அவரிடத்தில் வந்து மன்னிப்பைக் கோரினார்களா?

வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், நாம் மன்னிக்க மனவிருப்பம் கொண்டிராமைக்குச் சாக்குப்போக்கு எதுவும் இருப்பதில்லை. தேவன் நம்மை இலவசமாக மன்னிக்க மனவிருப்பம் கொண்டிருந்தது போலவே, நாமும் மற்றவர்களை மன்னிக்க மனவிருப்பம் கொண்டிருக்க வேண்டும்!

34ம் வசனம் பின்வருமாறு கூறுகிறது: "அவனுடைய ஆண்டவன் கோபமடைந்து, அவன் பட்ட கடனையெல்லாம் தனக்குக் கொடுத்துத் தீர்க்குமளவும் உபாதிக்கிறவர்களிடத்தில் அவனை ஒப்புக்கொடுத்தான்." மன்னிக்காமல் இருப்பதன் விளைவுகள் என்னவாக உள்ளன? முதலாவது, *நாம் மன்னிக்கத் தவறுகிறபோது, நாம் தேவனைக் கோபமூட்டுகிறோம்!* தேவனைக் கோபமூட்டுதல் என்பது பயங்கரமான விஷயமாக உள்ளது. கோபம்கொண்ட தேவன் சினம் நிறைந்தவராக இருக்கிறார் மற்றும் "ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே" (எபிரேயர் 10:31). இரண்டாவது, *நாம் மன்னிக்கத் தவறுகிறபோது, தொடக்கத்தில் நமது பாவங்களுக்குத் தேவன் நியமித்திருந்த அதே தண்டனைக்கு உள்ளாவோம்.* அந்த ராஜா, தாம் கொடுத்த மன்னிப்பைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, அந்த வேலைக்காரன் தனது கடன்கள் முழுவதையும் திருப்பிச் செலுத்தும் வரையில் அவனைச் சிறையில் அடைத்தான். அது எவ்வளவு காலத்திற்கு இருக்கும்? என்றென்றைக்கும் இருக்கும்! அவன் ஒருக்காலும் அதைத் திருப்பிச் செலுத்த முடியாது. நமக்கும் அதுவே நடைபெறும். நாம் மன்னிக்கத் தவறுகிறபோது, நாமும் நித்திய தண்டனை என்ற அதே தண்டத்திற்கு உள்ளாகிறோம்!

35ம் வசனத்தில் நாம் பின்ருமாறு வாசிக்கிறோம்: "நீங்களும் அவனவன் தன்தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற்போனால், என் பரம பிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார்." தேவன் நமக்கு மன்னித்தல் என்பது நாம் மற்றவர்களை மன்னித்தலைச் சார்ந்துள்ளது. மற்றும் நமது மன்னிப்பு நமது இருதயத்தில் இருந்து வரவேண்டும். நாம் மன்னிக்க மறுத்துவிட்டால், நாம் மன்னிக்கப்படமாட்டோம் (மத்தேயு 6:14, 15). நாம் முதலாவது இரட்சிக்கப்படுவதற்கும் பின்பு இரட்சிக்கப்பட்ட நிலையில் தொடர்ந்து நிலைத்திருப்பதற்கும், நம் யாவருக்கும் தேவனுடைய இரக்கம்,

*கிருபை மற்றும் மன்னிப்பு ஆகியவை தேவைப்படுகின்றன.*

## *முடிவுரை*

*இந்த வேலைக்காரன் பற்றிய உவமையில் நான்கு நிலைகளைப் பற்றி நாம் பேசியிருக்கிறோம்: முதலாவது, அவன் மன்னிக்கப்படாதிருந்தான்; இரண்டாவது அவன் மன்னிக்கப்பட்டிருந்தான்; மூன்றாவது, அவன் மன்னிக்காதவனாக இருந்தான்; நான்காவது, அவன் மன்னிக்கப்படக்கூடாதவனாக இருந்தான். நாம் ஒவ்வொருவரும் நம்மை இந்த வகைகளில் ஏதாவது ஒன்றில் வைக்க முடியும் என்று நான் சந்தேகப்படுகிறேன். நீங்கள் எவ்வாறு வகைப்படுத்தப்படுவீர்கள்?*

*நீங்கள் மன்னிக்கப்பட்டிருந்தால், உங்கள் பாவங்களை நீங்கள் எவ்வளவு பயங்கரம் நிறைந்தவைகளாக உணர்ந்தாலும், தேவன் உங்கள் மீது அன்புகூருகிறார் மற்றும் உங்களை மன்னிக்க விரும்புகிறார் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். மேலும், அவரது வசனத்தில் அவர் கொடுத்துள்ள வழியில் நீங்கள் அவரிடத்தில் வந்தால், அவர் உங்களை ஏற்றுக்கொள்ள, உங்களை மன்னிக்க மற்றும் உங்களைத் தமக்குச் சொந்தமாக்கிக்கொள்ள மறுப்பதற்கு வழியெதுவும் இல்லை.*

---

குறிப்புகள்

[1]Burton Coffman, *Commentary on the Gospel of Matthew* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1968), 282-83. [2]Ibid., 158. [3]William P. Barker, *As Matthew Saw the Master* (Westwood, N.J.: Fleming H. Revell Co., 1964), 97, quoted in Burton Coffman, *Matthew*, 285.